# JUDICIAL FORM. 53
# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII–Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF –CUM– JUDICIAL MAGISTRATE, KOTAGIRI

Case No. C.C.No. 28/2025

Deposition of Witness for Petitioner PW6 (LW7)

| | | |
|---|---|---|
| Name | : | ரகுமான்கான் |
| Father's Name | : | சதாமுசேன் |
| Village | : | உத்தமபாளையம் |
| Taluk | : | உத்தமபாளையம் |
| Calling | : | உதவி ஆய்வாளர் |
| Age | : | 30 |

Solemnly affirmed in accordance with the provisions of act x of 1873 on this day of

29.06.2026 Witness Signature :

எதிரி ஆஜர் இல்லை. மனு அனுமதிக்கப்பட்டது. இருதரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.

(இந்த சாட்சி விசாரணை காணொளி மூலம் பதிவு செய்யப்படுகிறது. காணொளியின் ஒரு முனையில் நீதிபதியும் மற்றும் போலீசார் மற்றம் எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரும் நீதிமன்ற ஊழியர்களும் இருக்கிறார்கள். காணொளியின் மற்றொரு முனையில் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ள சாட்சியான திரு. ரகுமான்கான் அவர்களும் தயாராக உள்ளார்கள். இரு தரப்பினரின் சம்மதத்தின் பேரில் இச்சாட்சி விசாரணை காணொளி மூலம்

**பதிவு செய்யப்படுகிறது.)**

**முதல் விசாரணை 01.20 P.M**

1. நான் தற்போது திருச்சி மாவட்டம், துவரங்குறிச்சி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 31.03.2023ம் தேதியன்று, நான் கோத்தகிரி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது, தலைமை காவலர் ரிச்சர்ட் ஜேக்கப் என்பவர் அருண் என்பவர் கொடுத்த புகாரின் பேரில், நிலை குற்ற எண். 102/2023, வழக்கு பதிவு செய்து எனது பார்வைக்கு வைக்கப்பட்ட, இவ்வழக்கை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். புகார்தாரனான அருண் மற்றும் மேகவர்ணபிரபாகரன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். சம்பவம் உண்மை என தெரியவந்ததால், எதிரிகளான வேம்புராஜ், தினேஷ் குமார் ஆகியோரை தேடி வந்த நிலையில் எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் இரவு சுமார் 9.30 மணியளவில் தகவலாளி அடையாளம் காட்ட டானிங்டன் பேருந்து நிலையம் அருகில் நின்று கொண்டிருந்த, எதிரிகள் இருவரையும் கைது செய்து, நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்பு 01.04.2023ம் தேதியன்று காலை சுமார் 07.00 மணியளவில் சம்பவ இடம் சென்று, சாட்சிகள் பிரசாந்த் மற்றும் ஹரிஹரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **பார்வை மகஜர் அ.த.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** அதன் பின்னர் காலை சுமார் 8.00 மணியளவில் சம்பவ இடத்தில் கிடந்த 31 செ.மீ நீளமுள்ள கம்பி ஒன்றை வாதி அடையாளம் காட்ட மேற்கண்ட அதே

சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து, கைப்பற்றினேன். **அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சாட்சிகள் பிரசாந்த் மற்றும் ஹரிஹரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி, வழக்கு சொத்து **எண். 86/2023 படிவம் 91 அ.த.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. 38 செ.மீ நீளமுள்ள கம்பி சா.பொ.1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.**

2. அதன் பின்னர் இவ்வழக்கில் வாதிக்கு சிகிச்சையளித்த மருத்துவர் கிருஷ்ணகுமார் விசாரித்த, விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் பெற்றேன். **அந்த காயச் சான்றிதழ் அ.த.சா.ஆ.3 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.** பின்னர் இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவ செய்த ரிச்சர்ட் ஜேக்கப் என்பரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

1. சாட்சி பிரசாத் என்பவரை சொன்ன தேதியில் விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அ.சா.4 ரிச்சர்ட் ஜேக்கப் பொய்யான தகவலின் அடிப்படையில் முதல் தகவல்அறிக்கை பதிவு செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. அ.சா.5 மருத்துவர் கிருஷ்ணகுமாரை நான் விசாரிக்கும்போது காயம்பட்ட நபருக்கு இரத்தக் காயம் இருந்ததாக கூறவில்லை என்று சொன்னால் சரிதான். புகார் கொடுத்த அருண்

வருவாய் ஆய்வாளராக இருக்கிறார் என்றால் சரிதான். அ.சா.2 கிராம நிர்வாக அலுவலராக உள்ளார் என்று சொன்னால் சரிதான். அ.சா.1 மற்றும் அ.சா.2 எத்தனை வருடமாக அரசு பணியிலிருப்பதாக எனது விசாரணையில் சொல்லியுள்ளார்கள் என்றால் எனது விசாரணையில் அவ்வாறு கூறவில்லை. நடந்ததாக சொல்லப்படும் சம்பவ இடம் எந்த சர்வே எண்ணில் உள்ளது, அதன் அளவு எவ்வளவு என்று அதன் செக்குபந்தியில் என்னவென்று புகாரில் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல, ஜக்கனாரை கிராமம் என்று கூறியுள்ளார்கள். எந்த வருவாய் கிராமத்தில் நடைபெற்றது என்றால் குறிப்பிடவில்லை.

2. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தின் உரிமையாளர் யார் என்று புகாரிலும் எனது விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல, பாலமுருகன் என்பவருக்கு சொந்தமான பட்டா நிலம் என்று கூறியுள்ளார். பாலமுருகனுடைய பூமி என்பதற்கு ஆதரமாக எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். பாலமுருகனை சாட்சியாக இந்த வழக்கில் சேர்க்வில்லை என்று சொன்னால் சரிதான். பாலமுருகனின் நிலத்தில் எந்தவித அனுமதியும் இல்லாமல் மண் எடுத்ததாக வழக்கில் கூறியுள்ள நிலையில் அவரை இவ்வழக்கில் எதிரியாக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல, புகாரில் பாலமுருகன் என்பவர் குப்பட்டா வாகனத்தை அனுமதியில்லாமல் இயக்கிய வேம்புராஜ், தினேஷ் என்பவர்கள் புகார்தாரரை தாக்கியதாக கொடுத்த புகாரின் பேரில், வழக்கு பதிவு செய்து விசாரணை செய்தேன். இரண்டு எதிரிகளும் ஒரே நேரத்தில், ஒரே மாதிரியான கெட்ட வார்த்தையால் திட்டியதாக புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால்

குறிப்பிடவில்லை. சம்பவம் நடந்த இடம், பொது இடம் என்று புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடவில்லை. இந்த வழக்கில் இரும்பு கம்பியை கைப்பற்றினோம் என்றால் சரிதான். எதிரிகள், இரும்பு கம்பியை கையில் வைத்திருந்ததாக புகாரில் சொல்லியுள்ளார்களா என்றால் புகாரில் சொல்லவில்லை.

3. புகாரில் எதிரி வேம்புராஜ், கையை பிடித்து கீழே தள்ளிவிட்டதாக கூறியுள்ளரா என்றால் அடித்து கீழே தள்ளியுள்ளதாக கூறியுள்ளார். எனது விசாரணையில் வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அதிகாரி ஆகிய இருவரும் கோத்தகிரி வட்டாட்சியரிடம் அனுமதி பெற்று வந்தோம் என்பதற்கான ஆதாரத்தை என்னிடம் காண்பித்தார்களா என்றால் காண்பிக்கவில்லை. கோத்தகிரி வருவாய் வட்டாட்சியரை இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். இரும்பு கம்பியை 31.03.2023 ஆம் தேதியன்று மாலை 7.00 மணிக்கு அருண் என்னிடம் அடையாளம் காட்டினாரா என்றால் மறுநாள் காலை காண்பித்தார். புகார் 31.03.2023ம் தேதி இரவு 8.30 மணிக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன் அடிப்படையில், வழக்கு சொத்தை அடையாளம் காட்டினேன் என்று கூறியுள்ளது பொய் என்று சொன்னால், சரியல்ல. இந்த வழக்கில் சம்பவ இடத்தில் குப்பட்டா வாகனத்தில் மண் எடுத்ததை புகைபடமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. வருவாய் ஆய்வாளரும், வட்டாட்சியரும் சம்பவ இடத்தில், எதிரிகள் இருந்தார்கள் என்பதை புகைபடமாக தாக்கல் செய்தார்களா என்றால் தாக்கல் செய்யவில்லை.

4. சம்பவத்தன்று அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் அரசு பணி செய்தார்கள் என்பதற்கு எந்த ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எதிரிகள், அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ கொலை மிரட்டல்விடுத்தார்கள் என்று கூறியுள்ளது பொய் என்று சொன்னால் சரியல்ல.

**Taken down by/before me in open court read over/ interpreted to the witness in the presence of the accused/ accused's pleader and admitted by the witness to be correct.**

**Sd/- G. Amirdham, 29.06.2026**
**Judicial Magistrate,**
**Kotagiri**